முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1049

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.08.2022, சனிக்கிழமை

1. கலிதனை வென்றிடும் அரங்கா வாழ்க
கந்தனின் சக்தியாய் வாழ்ந்திடும் தேசிகா வாழ்க
பழிபாவம் உலகோர்க்கு நீக்கி காத்தருள
பரமனோடு அன்னை அருளும் எந்தன் அவதாரமும் கொண்ட குருராஜனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 28 நாள், 13.08.2022 சனிக்கிழமை)
ஊழ் போக்கும் மகா சக்தியை உந்தனுள் ஞானமாக ஆறுமுகன் யான் தந்துள்ளேன்
வாழ்கின்ற மக்களின் மகத்துவத்தை வள்ளல் தன்மையை அவர்களுக்கு வேதமாக அருளும்
3. அருளுகின்ற ஆற்றலும் அற்புதமும்
ஆறுமுகன் யான் உந்தனுக்கு ஞானமாக தந்துள்ளேன்
உள்ளபடி அரங்கன் நீ கலியுகத்தின் சிறந்த ஞானி
உன் தர்மமே உலகத்தைக் காக்கும் மாதர்மமாகும்
4. தர்மவழி தவபலத்தை கூட்டி அருளுகின்ற
தவசி உந்தன் செயலும் சேவையும்
ஆறுமுகன் என் கருணையால் நடக்க அப்பனே உன் அசைவு அத்தனையுமே
ஆறுமுகன் என் சூட்சும இயக்கமாகும்
5. ஆகவே அரங்கன் நீ ஆற்றல்பட அன்பர்கட்கு தீட்சை அருள
அருள்பெற்ற உன் தொண்டர்கள் அனைவரும் அகிலமெங்கும் நிரம்பி
அகிலமாற்றத்துக்குண்டான சூட்சுமத்தை
ஆறுமுகன் என் இயக்கமாக செய்து முடிப்பரப்பா
6. அப்பனே நாமஜெபம் தானதர்மம்
ஆற்றல்பட அன்பர்களை தூண்டும் உன் இயக்கம் உயர்வானது
அரங்கன் மலரடி அகிலத்தில் பற்றுபவர்க்கு
அழியாமை ஈதூழே கிட்டுவதும் உறுதி உறுதி
7. உறுதி கொண்டு உலகோர் உன் வழி வர
உலக மாற்றமாக ஞானலோக ஆட்சிக்கால மாற்றம்
சடுதி நிகழக் கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–